1.227069

D
V211,31'Pob
Pob. 1-2
227069

வெளியீடு 21-06-2006 Issued 21-06-2006

69/08

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 19, 2006—தொகுதி 1—எண் 2

Friday the 19th May, 2006—Volume 1—No. 2

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V2tt,31'P06.
P06-1-2
227069.

[Price Rs. 3.00

649
13/11/2006

## 19–5–2006

### உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அறிவிப்புகள்—** | |
| (அ) உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டமை | 19 |
| (ஆ) பயங்கரவாத ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் | 22 |
| **2. பேரவைத் தலைவர் தேர்தல்** | 19-21 |
| **3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்** | 21-22 |
| **4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்—** | 22-46 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 22-24 |
| திரு. ஓ. பன்னீர்செல்வம் | 24-25 |
| திரு. டி. சுதர்சனம் | 25-27 |
| திரு. ஜி.கே. மணி | 27-29 |
| திரு. சி. கோவிந்தசாமி | 30-31 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 32-34 |
| திரு. மு. கண்ணப்பன் | 34-35 |
| திரு. கே. செல்வம் | 36 |
| திரு. விஜயகாந்த் | 36-37 |
| திரு. டி. ராமச்சந்திரன் | 37 |

பக்கங்கள்

4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்–தொடர்ச்சி

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 38-41

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் 41-43

மாண்புமிகு பேரவைத் தலைவர் 43-47

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 47

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227069.
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 5, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 மே 19, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் **திரு. டி. சுதர்சனம்** அவர்கள் தலைமையில் காலை 9–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:**

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

ஒரு காரியத்தை ஒருவர் எப்படிச் செய்து முடிப்பார் என்பதை ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பிறகு அந்தக் காரியத்தை அவரிடம் ஒப்படைக்க வேண்டும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டமை

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** பதின்மூன்றாவது சட்டப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்களாக உறுதிமொழியை எடுத்துக்கொண்டுவிட்டார்கள்.

## 2. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல், அரசமைப்புச் சட்டத்தின் 178–வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப்

பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4-ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப்பெற்றவர்: திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள்

முன்மொழிந்தவர் : மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

வழிமொழிந்தவர் : மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், நிதி அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் மட்டும், நியமனம் செய்யப்பட்டு, வேட்புத் தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள், இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். இத்துடன் என்னுடைய அலுவல் முடிவடைந்தது.

இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்படுகின்ற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று, பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், ஆளுங்கட்சியை அடுத்த பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் அழைத்துவந்து, பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.





பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும் அழைத்துவந்து, அவர்களது இருக்கையில் அமரச் செய்தார்கள்.) (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–05

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8, உள்விதி 2-ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். அதன் விவரம் வருமாறு:–

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. வி.பி. துரைசாமி அவர்கள்

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள், மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி)

வழிமொழிந்தவர் : மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. வி.பி. துரைசாமி அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், திரு. வி.பி. துரைசாமி அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்று மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 1. அறிவிப்புகள் – தொடர்ச்சி

## (ஆ) பயங்கரவாத ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜீவ் காந்தி நினைவு தினத்தையொட்டி, இன்று 19–5–2006 காலை 11–00 மணிக்கு பயங்கரவாத ஒழிப்பு உறுதிமொழி, சென்னை, கோட்டையிலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் எடுக்க வேண்டியிருப்பதால், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் அதில் பங்கேற்கும்வகையில் 11–00 மணிக்கு முன்னதாக, அவையின் இன்றைய நிகழ்ச்சிகளை முடிக்க வேண்டியுள்ளது. எனவே, பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுகளைத் தெரிவிக்கும் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள், தங்களது உரையைச் சுருக்கமாக முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துரைகள். முதலில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய தலைவராக, சபாநாயகராக தங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த அந்தத் தேர்வுக்கு, என்னுடைய உளமார்ந்த மகிழ்ச்சியையும், பாராட்டையும் நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவை ஒருமனதாகச் செயல்பட வேண்டும் என்பதற்கு அடையாளமாக, தாங்களும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒருமனதாக இந்த அவையை நடத்திச் செல்கிற அந்தச் சிறப்புக்கு, நடுநிலை உணர்வுதான் மிக அடிப்படையாக அமைந்து இருப்பது என்பதும், பேரவைத் தலைவருடைய செயற்பாட்டில் அவருடைய நடுநிலை உணர்வுதான் மிகப் பெரிய அளவு



போற்றப்படுகிறது, பாராட்டப்படுகிறது என்பதும் நாம் எல்லோரும் அறிந்த உண்மையாகும். தாங்கள், ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சிறந்த வழக்கறிஞராக, பட்டறிவு பெற்றிருக்கின்றீர்கள். அனுபவம் பெற்றிருக்கின்றீர்கள். வழக்கறிஞராகத் தாங்கள் பணியாற்றிய அந்தக் காலக்கட்டத்தில் பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் தங்களுடைய கருத்திற்கு, எண்ணத்திற்கு வந்திருக்க முடியும். அவை குறித்து, ஒரு நீதிமன்ற முடிவு எப்படி அமைகிறது என்பதையும் தாங்கள் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். அதிலேயும், சிறப்பாக இந்தப் பேரவையினுடைய தலைவராக விளங்கிய பெருமைக்குரிய செல்லபாண்டியன் அவர்களிடத்திலே, நீங்கள் அவருக்குத் துணையாக இருந்து வழக்கறிஞராகப் பயிற்சி பெற்றவர் என்ற முறையிலும், அவர் சபாநாயகராகவும் இருந்தவர் என்ற முறையில், பல்வேறு சிறப்பான தகுதிகளை நீங்கள் பெறக்கூடிய அரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள்.

*முற்பகல் 9–10*

திராவிட முன்னேற்றக் கழகத்திலே இணைந்த நாள் முதலாக, அந்த இயக்கத்திற்காக, கொள்கைக்காக சிறந்த முறையிலே பாடுபட்டு, நான்கு முறை மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி, பொது மக்களோடு மிக நெருக்கமான தொடர்பும், உறவும் கொண்டவராக விளங்கியிருக்கின்றீர்கள். எனவே, தங்களது வழக்கறிஞர் அறிவு, பயிற்சி, செல்லபாண்டியன் அவர்களிடத்திலே பெற்ற அந்தப் பயிற்சி, பழக்கம்; பொது மக்களோடு நீங்கள் கொண்ட உறவு ஆகியவற்றின் காரணமாக நீங்கள் ஏற்றிருக்கின்ற பெரிய பொறுப்பை, மிக நல்ல முறையிலே நிறைவேற்றுவீர்கள்; அந்தக் கடமையை நிறைவேற்றி அனைவரது பாராட்டையும் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தங்களுக்குத் துணையாக, ஏற்கெனவே இந்தச் சட்டப் பேரவையிலே துணைத் தலைவராகவும் பணியாற்றிய திரு. வி.பி. துரைசாமி அவர்கள், துணைத் தலைவராக இந்த அவையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களும் பொது வாழ்விலே ஈடுபட்டு, ஏற்கெனவே இந்த அவையினுடைய துணைத் தலைவராகவும் இருந்து பயிற்சி பெற்றவர் ஆதலின், கடமையுணர்வோடு செயலாற்றக்கூடியவர்கள். எனவே, திரு. வி.பி. துரைசாமி அவர்களும், அவருடைய கடமை உணர்வினாலே பலரது பாராட்டையும் பெறக்கூடிய அளவிற்கு, சிறப்பாகப் பணியாற்றி அனைவரது பாராட்டையும் பெறவேண்டுமென்று நான் வாழ்த்துகின்றேன்.

தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுக்கும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. வி.பி. துரைசாமி அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த வாழ்த்துகளை நான் தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண தொண்டனாக இருந்த என்னை, இந்த அளவிற்கு அடையாளம் காட்டி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையிலே, நான் இங்கு இடம் பெறுவதற்கு வழிகாட்டிய எங்கள் இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய முதல் வணக்கத்தையும், நன்றியையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, எனக்கு வாக்களித்து இந்தப் பேரவைக்கு அனுப்பி வைத்த பெரியகுளம் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழகத்தின் இந்தப் பதின்மூன்றாவது சட்டப் பேரவைக்குத் தாங்கள் தலைவராகத் தேர்வு பெற்றிருப்பதற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கு முன்னால், இந்தச் சீர்மிகு அவையைப் பல்வேறு மாமேதைகள், தமிழாய்ந்த தமிழறிஞர்கள் வழி நடத்தியிருக்கின்றார்கள். அந்த வரிசையில், இன்று நீங்கள் இடம் பெற்று, வரலாற்றில் ஒரு தனி இடத்தைப் பெறுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு எனது உளமார்ந்த நன்றியையும், வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 9–15

தாங்கள் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நேரம் முதல், நீங்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்லர். இங்கே இருக்கின்ற எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவானவர் என்று, இங்கு இருக்கின்ற



மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உணர்கின்றவகையில், கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, நடுநிலையோடு இந்த அவையை நீங்கள் நடத்துவீர்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகின்றேன். கோடிக்கணக்கான தமிழ் மக்களின் வாழ்வு உயர வேண்டும்; அவர்கள் நலன் பாதுகாக்கப்படவேண்டும்; தமிழ் மக்களின் பெருமை உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்றுதான் மக்கள் நம்மை அவர்களின் பிரதிநிதிகளாக இங்கே தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கின்றார்கள். அவர்கள் எண்ணம் நிறைவேறிடும்வகையில், நீங்கள் உங்களை நீங்களே சமன் செய்துகொண்டு, இந்த வரலாற்றுப் புகழ்மிக்க சபையை நடத்திட வேண்டும் என்றும், அதற்கு எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, தமிழ்நாடு நலன் காக்க உங்களுக்கு நாங்கள் முழு ஒத்துழைப்பு தருவோம் என்றும் கூறி வாழ்த்துகின்றேன்.

அதேபோல, இந்தச் சட்டமன்றத்தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு திரு. வி.பி. துரைசாமி அவர்கள், பாரம்பரியமிக்க இந்தச் சட்டமன்றத்தின் மேன்மைக்கு மெருகூட்டும்வகையிலும், சட்டமன்றத்தின் பெருமையைக் கட்டிக்காக்கும்வகையிலும், தன்னுடைய கடமையை நிறைவேற்றுவார் என்ற எனது நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவைத் தலைவராக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். தாங்கள் இங்கே ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, அனைவருக்கும் நன்றி சொல்கின்ற இந்த நேரத்தில், எங்களையெல்லாம் சட்டமன்றத்திற்கு அனுப்பி – வேட்பாளர்களாக அறிவித்து, வெற்றிபெறச் செய்து – எங்களையெல்லாம் இங்கு அமரச் செய்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, [illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227069.
சென்னை-600 008

கூட்டணியை அமைத்து, கூட்டணி வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று, நீங்கள் ஒருமனதாக இந்த அவையினுடைய பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்த பதின்மூன்றாவது பேரவை, பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், உறுப்பினர்களுடைய – 234 உறுப்பினர்களுடைய – பாதுகாவலராக நீங்கள் திகழ்கின்றீர்கள். இந்த மன்றத்தைப் பல்வேறு சபாநாயகர்கள் அலங்கரித்திருக்கிறார்கள், நல்லமுறையிலே நடத்தியிருக்கின்றார்கள்; பேரும் புகழும் பெற்றிருக்கின்றார்கள். அதேபோன்று, நீங்களும் – மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் செல்லபாண்டியன் அவர்களிடத்திலே, அவருக்குத் துணையாக இருந்து சட்டம் பயின்றவர்கள்; அந்தவகையிலே, அவையிலே அன்று சபாநாயகராக இருந்த செல்லபாண்டியன் அவர்கள் எப்படி சீரோடும், சிறப்போடும், வலிவோடும், பொலிவோடும் இந்த மன்றத்தை நடத்தினாரோ, அதேபோன்று நீங்களும் – நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. பல உறுப்பினர்கள் பல நேரங்களிலே கோபப்படலாம்; தனக்கு நேரம் ஒதுக்கவில்லையென்று வருத்தப்படலாம்; ஆத்திரப்படலாம்; சூடான விவாதங்கள் இங்கே நடைபெறலாம். அப்போதெல்லாம் நீங்கள் சிறிதுகூட மனம் கோணாமல், இன்முகத்தோடு உறுப்பினர்களை அணுகி, அவர்களை நீங்கள் இன்முகத்தோடு சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற முறையிலும், எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்காவிட்டாலும், அவர்களுக்கெல்லாம் நல்ல நேரங்களை ஒதுக்கிக் கொடுத்து, ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்று பாராமல், சமநிலையோடு – பேராசிரியர் சொன்னதுபோன்று சமநிலையோடு இருந்து – நீங்கள் செயலாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. இந்த மன்றத்திலே நீங்கள் இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள், ஆற்றலும், நிறைய அனுபவமும் பெற்றிருக்கிறீர்கள்.

அதேபோன்று, துணை சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. வி.பி. துரைசாமி அவர்கள், இந்த மன்றத்தினுடைய துணைத் தலைவராக ஏற்கெனவே பணியாற்றி அனுபவம் பெற்றிருக்கின்றவர்கள்; நாடாளுமன்றத்திலே உறுப்பினராக இருந்து பணியாற்றி அனுபவம்



பெற்றிருக்கிறார்கள். நீங்கள் இருவரும் செய்கின்ற பணி, இந்த மன்றத்திற்கு நிறைய புகழையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டு, காங்கிரஸ் கட்சி சார்பாக உங்கள் அனைவரையும் வாழ்த்தி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

முற்பகல் 9–20

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க பதின்மூன்றாவது சட்டப் பேரவையில் நுழைவதற்கும், இங்கே உங்களிடையே அமர்ந்து பணியாற்றுவதற்கும் வாய்ப்பளித்த பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், சமூகநீதிக் காவலர் மருத்துவர் ஐயா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை முதற்கண் தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவர் ஐயா அவர்களோடு இணைந்து, ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ளவர்களை எல்லாம் ஒன்றாக இணைத்து, தமிழ்நாட்டு மக்களின் நலன் காக்க வேண்டும் என்ற அந்த உணர்வோடு, ஒரு நல்லாட்சி தர வேண்டும் என்ற அந்த உந்துதலின் அடிப்படையில், ஜனநாயகத்தின் மிகப் பெரிய சக்திகளை எல்லாம் ஒன்றாக இணைத்து, நடந்து முடிந்த தேர்தலைச் சந்தித்து, மகத்தான வெற்றியைப் பெற்று, அறிவித்தவற்றை எல்லாம் இன்று நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய ஒப்பற்ற தலைவராக, (மேசையைத் தட்டும் ஒலி) தன்னிகரில்லாத தலைவராக, தமிழ் இனத்தினுடைய மூத்த குடிமகனாக இருந்து தமிழ்நாட்டை வழிநடத்திக் கொண்டிருக்கிற, இந்தியத் திருநாட்டிற்கு எடுத்துக்காட்டாய் விளங்கிக் கொண்டிருக்கிற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவரோடு அமைச்சரவையில் வீற்றிருக்கிற நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், இன்று ஆளுங்கட்சி வரிசையில், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிற அத்தனை சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும், இங்கே வருவதற்கு வாக்களித்து, இந்த வாய்ப்பினை நல்கிய தொகுதிவாழ் மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்"

என்றார் வள்ளுவர். நல்ல தன்மை, நல்லது அல்லாத தன்மை ஆகிய இரண்டையும் எண்ணி, நல்ல தன்மைக்குரியவனை கொள்ளல் வேண்டும் என்கிறார். அதைப்போலவே,

"நாடோறும் நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு."

ஆள்பவன் நாள்தோறும் செயலாற்றுவாரை ஆராய்க; அவர் தவறாமையே உலகத் தவறாமையாம் என்ற வள்ளுவருடைய கூற்றிற்கு இணங்க, இன்று தகுதி உடையவரைத் தகுதியான இடத்திற்குத் தேர்ந்தெடுக்கக்கூடிய தலைசிறந்த மனித நேயப் பண்பாளர் என்பதை தலைவர் கலைஞர் அவர்கள் உங்களைத் தேர்ந்தெடுத்ததன்மூலம் நிரூபித்து இருக்கிறார். ஆகவே, நல்ல ஒருவரை, அனுபவமிக்க ஒருவரை, இந்த அவைக்குப் பேரவைத் தலைவராகத் தலைவர் கலைஞர் அவர்களாலே தேர்வு செய்யப்பட்டிருப்பது, நம்முடைய அவைக்குப் பெருமை என்பதை நான் இங்கே முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தச் சட்டப் பேரவை என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க, கண்ணியத்திற்குரிய மரபுகள் நிறைந்தது. இந்த மாமன்றத்தில், இந்த நாற்காலியில் அமர்ந்து பணியாற்றிய பெருமைக்குரியவர்கள் சில பேர். அதிலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்தான், மதிப்பிற்குரிய செல்லபாண்டியன் அவர்கள். அவர் இந்தச் சட்டப் பேரவையை அலங்கரித்தவர். அவருடைய மாணவராக இருந்து அவரோடு பணியாற்றிய பெருமை உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல; நீங்கள் ஒரு மூத்த வழக்கறிஞர். பல்வேறு நிலைகளிலே நடுநிலையோடு வாதாடியவர் என்ற பெருமைக்குரியவர். தமிழகத்தினுடைய நெல்லை மாவட்டத்தில் பிறந்து, அந்தப் பகுதி மக்களுக்கு ஆற்றிய பணிகளை நான் நன்கு அறிந்தவன். 1996–ல் சட்டமன்ற உறுப்பினராக உங்களோடு பணியாற்றியவன் என்ற நிலையிலே மட்டுமல்ல; உங்களோடு சட்டமன்றக் குழுவில் பலமுறை உடனிருந்து, இருவரும் ஒன்றாக இருந்த காலத்தில் உங்களுடைய அருமைகளை, பெருமைகளை, உங்களிடமுள்ள மனித நேயப் பண்புகளை நன்கு உணர்ந்தவன். ஆகவே, நடுநிலையோடு செயலாற்றக்கூடிய ஒருவர், இந்த மாமன்றத்தில் பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டு அமர்ந்திருப்பது, நம்முடைய மன்றத்திற்குப் பெருமை என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஒரு வழக்கறிஞராக இருந்ததோடு மட்டும் அல்ல; தான் சார்ந்த இயக்கத்திற்குச் சோதனை ஏற்பட்ட நேரத்தில்கூட, அந்த



இயக்கத்தின்பால் கொண்ட பற்றுதலை, ஏற்றுக்கொண்ட தலைமையிலிருந்து இம்மியளவும் மாறாமல், இயக்கத்தைத் தொடர்ந்து அந்த மாவட்டத்தில் வழிநடத்திச் சென்ற பெருமை உங்களுக்கு இருக்கிறது. அந்த அளவுக்குப் பெருமைக்குரிய ஒரு நல்லவரான தாங்கள், தலைவர் கலைஞர் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, தேர்வு செய்யப்பட்டு, இந்த மாமன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றுவது பொருத்தமுடையது. உங்கள் பணி இந்த மன்றத்திற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் எடுத்துக்காட்டாக அமையும்; அமைய வேண்டும் என்று தெரிவித்து, எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா அவர்களின் சார்பிலேயும் உங்களை வாழ்க, வளர்க, உங்கள் பணி சிறக்க என நான் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அதைப்போல பெருமைக்குரியவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். அவர் நாடாளுமன்றத்தில் சிறப்பாகப் பணியாற்றியவர். இதே சட்டப் பேரவையில் பேரவைத் துணைத் தலைவராகச் சிறப்பாகப் பணியாற்றியவர் என்று எல்லோராலும் பாராட்டப்பட்டவர். அதைப்போலத்தான், இன்று தலைவர் கலைஞர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதிலும் குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக, அந்த மக்களின் உரிமைக் குரலாக விளங்க வேண்டும் என்று தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றிக் கொண்டிருக்கிற, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக, சமூக நீதிக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருப்பது ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்குப் பெருமை என்ற வகையிலே நீங்கள் பொறுப்பேற்று இருக்கிறீர்கள். அதே நேரத்தில் ஒரு வழக்கறிஞர், சிறந்த வழக்கறிஞர், உங்களைப் பற்றியும் நாங்கள் எல்லாம் நன்றாக அறிந்தவர்கள். ஆகவே, பேரவைத் துணைத் தலைவருடைய பணி, இந்த மாமன்றத்திற்குச் சிறப்பாக அமையும் என்ற நம்பிக்கையோடு, பேரவைத் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள்; நடுநிலையோடு பணியாற்றுவீர்கள்; இந்த மன்றத்திற்குப் பெருமை சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு பேரவைத் தலைவரையும், பேரவைத் துணைத் தலைவரையும் வாழ்க, வாழ்க என வாழ்த்தி நன்றி தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 9–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, சக சட்டமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் அன்பான வணக்கம். சட்டப் பேரவைத் தலைவராகத் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், அதன் சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலும் எங்களுடைய வாழ்த்துக்களையும், மனப்பூர்வமான பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில், நம்முடைய தமிழகச் சட்டப் பேரவைக்கு நீண்ட நெடிய பாரம்பரியம் உண்டு. இந்தப் பேரவையின் தலைவர்களாக இருந்து, மிகச் சிறப்பான முறையில் சட்டப் பேரவையினுடைய ஜனநாயகத்தை மதித்து, இந்தச் சபைக்குப் பெருமை சேர்த்த பெருமைக்குரிய பல தலைவர்கள் அலங்கரித்த பேரவைத் தலைவர் இருக்கையிலே, இன்று நீங்கள் தேர்வு செய்யப்பட்டு அமர்ந்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரியது. தாங்கள், ஏற்கெனவே இந்த அவையின் தலைவராக இருந்த, பெருமதிப்பிற்குரிய செல்லபாண்டியன் அவர்களிடத்தில் சட்ட நுணுக்கங்களைச் சிறந்த முறையில் கற்றறிந்திருக்கக்கூடிய ஒரு சிறந்த சட்ட வல்லுநர் என்ற முறையிலும், அதேபோல, சட்ட ஞானங்களைப் பெற்றிருக்கக்கூடியவர் என்ற முறையிலும் தாங்கள், நிச்சயமாக இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளை மிகச் சிறப்பான முறையில் நடத்திச் செல்வீர்கள் என்று மனப்பூர்வமாக நாங்கள் நம்புகிறோம்.

இங்கே பேரவைத் தலைவராக கடந்த காலங்களிலே இருந்து சிறப்பாகப் பணியாற்றியிருக்கக்கூடிய திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள், இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சராக வீற்றிருக்கிறார். அவரைப் போன்று, ஏராளமான சட்டப் பேரவைத் தலைவர்கள் இந்த அவையில் சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள், கடந்தகால அனுபவங்களைக் கவனத்தில்கொண்டு, ஆளுங்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிப்பதைவிட, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூடுதலான வாய்ப்பை அளிக்க வேண்டும். குறிப்பாக, 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பொன்மொழியை, தன்னுடைய தாரக மந்திரமாக ஏற்று, மாற்று கட்சிகளுடைய கருத்துகளுக்கு மிக முக்கியத்துவம் அளித்துவருகிற, நம்முடைய பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்று வீற்றிருக்கிற இந்த அற்புதமான சந்தர்ப்பத்தில், தமிழ்நாடு முழுவதும் இருக்கிற மக்களினுடைய பல்வேறு தேவைகளுக்காக, இந்தச்



சட்டமன்றத்தில் மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து அரசினுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு, நீங்கள் உரிய வாய்ப்பளித்து இந்தச் சபையை ஜனநாயகப்பூர்வமாக நிச்சயமாக நடத்திச் செல்வீர்கள் என்ற மனப்பூர்வமான எங்களுடைய நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தியப் பாராளுமன்றத்தில் மக்களவைத் தலைவராக வீற்றிருக்கக்கூடிய பெருமதிப்பிற்குரிய சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள், தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் நாம் பார்க்கிறபோது, பல நாட்கள் உறுப்பினர்கள் அந்த அவையையே நடத்த முடியாத அளவிற்கு அவையை முடமாக்குகிற காலத்திலேகூட, ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைக்கூடத் தூக்கி வெளியே வீசுகிற மரபை, அங்கே அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை. ஆகவே, எவ்வளவு எதிர்ப்புகளைத் தெரிவித்தாலும், அத்றகெல்லாம் முழு வாய்ப்பளித்து, பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கட்டிக் காக்கின்ற மக்களவைத் தலைவர் அவர்களுடைய அனுபவங்களையும் பின்பற்றி, இந்தச் சபையில் மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளித்து, நம்முடைய சட்டமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்க நிச்சயமாக நீங்கள் பணியாற்றுவீர்கள் என்ற பெரும் நம்பிக்கையை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்து, தங்களுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பிலும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–30*

அதேபோல, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கக்கூடிய பெருமதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு. வி.பி. துரைசாமி அவர்கள், 1989–ல் இதே அவையிலே, அவர் சட்டமன்றத் துணைத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில், இந்த அவையில் நானும் உறுப்பினராக இருந்து பணியாற்றுகிற வாய்ப்பைப் பெற்றேன். அந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய மிகச் சிறப்பான பணி, இந்தச் சட்டமன்றத்தை வழி நடத்திச் செல்வதிலே அவருடைய ஆற்றல், நிர்வாகத் திறமைகளை நேரில் பார்த்தவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில் இந்த அவையையும் அவர் சிறப்பாக நடத்திச் செல்வதற்கு, பேரவைத் தலைவர் அவர்களுக்குப் பக்க பலமாக இருந்து, இந்த அவையினுடைய மரபுகளை, அவையின் கண்ணியத்தை, ஜனநாயத்தைப் பாதுகாக்க அவர் நிச்சயம் சிறப்பாகப் பணியாற்றுவார் என்ற நம்பிக்கையோடு அவருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் மகிழ்ச்சியான வாழ்த்துக்களை, பாராட்டுகளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையினுடைய தலைவராகத் தேர்வு செய்யப்பெற்றிருக்கிற தங்களுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் இந்தச் சிறப்புமிக்க பொறுப்பினை ஏற்று, மிகத் திறம்பட நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. 1996 ஆம் ஆண்டு, தாங்கள் இந்த அவையிலே உறுப்பினராக இருந்தபோது, தங்களோடு நானும் உறுப்பினராக இருந்து செயல்படுவதற்கான வாய்ப்பினைப் பெற்றவன். இப்போதும் இந்த வாய்ப்பினைப் பெற்று, இங்கே வாழ்த்துவதற்கான அந்த வாய்ப்பைப் பெற்று அதற்குரிய இந்த நல்ல சூழ்நிலைகளை உருவாக்கித் தந்திருக்கிற, நமது தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்தச் சபையினுடைய பாரம்பரியம், வரலாறு, சிறப்புகள் எல்லாவற்றையும் தாங்கள் அறிந்தவர்கள். நான் 1996 ஆம் ஆண்டு இந்த அவையிலே உறுப்பினராகச் செயல்படுவதற்கான வாய்ப்பினைப் பெற்றபோது, அன்றைய பேரவைத் தலைவராக மாண்புமிகு பி.டி.ஆர். அவர்கள் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகச் செயல்படுத்தினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், அதனுடைய தலைமையிலே செயல்பட்ட இந்தச் சட்டமன்றம், குறிப்பாக நமது முதலமைச்சராகப் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்களுடைய வழிகாட்டுதல் இவையெல்லாம் எங்களைப் போன்ற புதிய உறுப்பினர்களுக்கு மிகப் பெரிய உந்து சக்தியாக விளங்கியது. அதிலும் குறிப்பாக, நான் பல மேடைகளிலே குறிப்பிட்டுச் சொல்வதைப்போல, நாங்கள் அரசியல் கட்சிகளிலே பொறுப்பானவர்களாக இருந்து செயல்பட்டு, பல மேடைகளிலே பேசுகிற வாய்ப்பைப் பெற்று இருந்தாலும்கூட, இந்தச் சட்டமன்றத்தினுடைய மரபுகளை ஏற்று, புரிந்து செயல்பட்டு இந்த அவையிலே எப்படி பேசவேண்டும்; எப்படி குறுக்கீடுகள் செய்வது; எப்படி தலையீடுகள் செய்வது அல்லது கருத்துகளை எப்படி வலியுறுத்துவது, பதிவு செய்வது என்பதைப் பற்றியெல்லாம், அவருக்கே உரித்தான பாணியிலே இந்தச் சபையினுடைய உறுப்பினர்களுக்கெல்லாம் ஆசானாக, ஆசிரியராக இருந்து வழிகாட்டியவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர்



அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரிடத்திலே பெற்ற அந்தப் பயிற்சி இந்த அவையிலே பல்வேறு கருத்துகளைச் சிறப்பாகப் பதிவு செய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுத் தந்தது என்பது மறக்க முடியாத ஒன்று. மீண்டும் அவர்களுடைய தலைமையிலே இங்கே ஆட்சி அமைந்து இருக்கிறது. எங்களைப் போன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எல்லாம், ஜனநாயகப்பூர்வமாக பேசுகிற அந்த வாய்ப்பு நிரம்பவே கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. பேரவைத் தலைவர் என்ற முறையில், நீங்கள் சிறப்பாக அதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சபையிலே, நாங்கள் பேசுகிறபோது, 1996 ஆம் ஆண்டு பேரவைத் தலைவராக இருந்த மரியாதைக்குரிய பி.டி.ஆர். அவர்கள், மிகக் கடுமையாக நடந்துகொள்வதைப் போன்ற தோற்றம் தெரியும். நாங்கள் கையைத் தூக்கிப் பேசுவதற்கு அனுமதி கேட்டால், "இல்லை, உட்கார்" என்று ஒரே வரியில் சொல்வார். அப்போதே அடுத்ததாக நம்மை அழைப்பார் என்று நான் தீர்மானித்து விடுவேன். இது, நமது சபையிலே இருக்கிற உறுப்பினர்கள், ஜனநாயக மரபுகளை எப்படி வெளிப்படுத்துவது என்பதை, அனுபவப்பூர்வமாக இந்தச் சபையிலே நெறிமுறைகளை பாதுகாத்துச் செயல்படுத்துவதற்குரிய முயற்சிகளை எடுப்பதற்கு, அந்தப் பயிற்சியை அளித்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதை நிறைவேற்றியவர் நம்முடைய பிடிஆர். அவர்கள். அதைப்போலவே இந்த முறையும் தாங்கள் அந்தச் சிறப்புக்குரிய பணியை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களுக்கு வாழ்த்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9–35

அதேபோல, துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிற மரியாதைக்குரிய திரு. வி.பி. துரைசாமி அவர்களுக்கும் எனது சார்பிலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும், எங்களது சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பிலும் வாழ்த்துக்களை, பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களும் இந்த அவையிலே மிகச் சிறப்பாகச் செயல்பட்டு, எங்களுக்கெல்லாம் எல்லாவகையிலும் உதவியும், ஒத்துழைப்பும் நல்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, எல்லாவற்றுக்கும் மேலாக, தமிழக மக்கள் ஜனநாயகத்தை மீட்டெடுத்து, ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆட்சியை உருவாக்கியிருக்கிறார்கள். அதன்மூலமாக, தமிழக மக்கள் எல்லாவிதமான வாழ்வும், வளமும் பெறுவார்கள் என்ற நம்பிக்கை

எங்களுக்கு இருக்கிறது என்ற அந்த நல்ல செய்தியைச் சொல்லி, தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் துயிலும் திசை நோக்கி வணங்கி, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அவையின் தலைவராகவும், துணைத் தலைவராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற, தங்கள் இருவரையும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டப் பேரவைக் கட்சியின் சார்பில் மனதார வாழ்த்துகின்றேன், பாராட்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய தாங்கள், ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்து, வழக்கறிஞர் பட்டம் பெற்று, முன்னாள் பேரவைத் தலைவரும், தலைசிறந்த குற்றவியல் வழக்கறிஞருமான மாண்புமிகு செல்லபாண்டியன் அவர்களிடம் இளம் வழக்கறிஞராகப் பணியாற்றி, பேரும் புகழும் பெற்றவர்கள். அதேபோல, 1996 ஆம் ஆண்டு இந்தப் பேரவையினுடைய சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பாகப் பணியாற்றி இருக்கின்றீர்கள். இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களிடத்திலே, இந்த மிகப் பெரிய பொறுப்பை இந்தப் பேரவை வழங்கியிருக்கின்றது.

அதேபோல துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு திரு. வி.பி. துரைசாமி அவர்கள், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் சார்பில், மிக சாமானிய ஏழைக் குடும்பத்திலே பிறந்து, வழக்கறிஞர் பட்டம் பெற்று, 1989 ஆம் ஆண்டில் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இதே அவையில் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்கள். எல்லோரிடத்திலும் இன்முகத்தோடு பேசி, சட்டமன்றத்தில் ஆணைகள் பிறப்பிக்கின்ற நேரத்திலேயும், புன்முறுவலோடு அந்த ஆணைகளைப் பிறப்பித்து, தன்னுடைய கடமையை நிறைவேற்றிய பெருமைக்கு ஆளாவார்கள். அப்படிப்பட்டவர், மீண்டும் இந்தப் பேரவையினுடைய துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றிருப்பது, பாராட்டத்தக்கது. நான் மனதார அவர்களையும் வாழ்த்துகிறேன்.



பேரவைத் தலைவரும், துணைத் தலைவரும் சட்டத் துறையிலும், அரசியலிலும் நல்ல அறிவாற்றல் பெற்றவர்கள். அந்த ஆற்றல் இந்தச் சபையைச் சிறப்பாக நடத்திச் செல்வதற்குப் பயன்பட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

39 ஆண்டுகளுக்கு முன்னால், 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்கள். அப்போது, இதே பேரவையில் பேரவையினுடைய தலைவர், துணைத் தலைவர் தேர்தல் நடைபெற்றது. 1967 மார்ச் 17 ஆம் நாள்; அன்றையதினம் பேரவைத் தலைவராக, தமிழ்த் தந்தை சி.பா. ஆதித்தனார் அவர்களும், துணைத் தலைவராக புலவர் கோவிந்தன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள், முதல்வர் என்ற முறையில் தலைவரையும், துணைத் தலைவரையும் பாராட்டிவிட்டு, தன்னுடைய பேச்சைத் தொடரும்போது, 1957-ல் முதலாவதாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சபைக்கு வந்து எதிர்க்கட்சி வரிசையிலே உட்கார்ந்திருந்த நேரத்தில் பேசியதைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள்:

முற்பகல் 9-40

"1957-வது ஆண்டு எதிர்க்கட்சியிலிருந்தபோது, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் பேரவைத் தலைவராக இருந்தார். அந்த ஐந்து வருடங்களில் எதிர்க்கட்சி வரிசையிலிருந்த நாங்கள் யாரும் வருத்தப்படத்தக்க விதத்தில், ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை" என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். மேலும், தனது வாழ்த்துரையில் 1967-வது ஆண்டு சபையில் இடம் பெற்றிருந்த எதிர்க்கட்சிகளைக் குறிப்பிட்டுப் பேசுகையில், அண்ணா அவர்கள் சொல்கிறார்கள்: "ஒரு நல்ல பழமொழி உண்டு; 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது'; ஆகையினால், எதிர்க்கட்சியினர் இளைத்திருக்கிறார்கள் என்று சொல்லமாட்டேன்; எங்களை வழி நடத்திச் செல்ல அவர்கள் வந்திருக்கிறார்கள்; அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதில் தாங்கள் கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சபையினுடைய தலைவரையும், துணைத் தலைவரையும் அன்றைக்குப் பாராட்டினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்த வாழ்த்தை இந்த நேரத்திலே நினைவுபடுத்தி, அண்ணா வழியில் கண்ணியம் காத்து, கட்டுப்பாடுடன் பணியாற்றி, இந்தச் சபையின் கௌரவத்தை உயர்த்துவதற்கு எல்லாவகையிலும் நாங்கள் ஒத்துழைப்போம் என்ற உறுதியைத் தெரிவித்து, வாழ்த்தி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. செல்வம் அவர்கள்.

**திரு. கே. செல்வம்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் சபாநாயகராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக உங்களுக்கு மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். தமிழக மக்களின் நம்பிக்கைபெற்ற தலைவர் கலைஞர் அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வழிவந்த நீங்கள், சட்டமன்ற மரபுகளைப் பின்பற்றுவீர்கள் என்று எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. தமிழக மக்களின் குரல்களை இங்கே பிரதிபலிக்கின்ற வகையிலே, நீங்கள் அனுமதிப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த வகையிலே இன்னொருபுறம் விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக உங்களுக்கு நன்றியினைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பதின்மூன்றாவது சட்டசபையின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. ஆளுங்கட்சி சார்பில் இந்தச் சட்டமன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், தாங்கள் அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவானவர் என்பதிலும், குறிப்பாக எதிர்க்கட்சிகளின் உரிமைகளைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள் என்பதிலும் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. வழக்கறிஞராகத் தாங்கள் தொழில் புரிந்த நெடிய அனுபவம் இச்சட்டமன்றத்திலும் பயன்படும் என்பதும், நீதிமன்றம்போல இச்சட்டமன்றத்தையும் நீங்கள் நடத்துவீர்கள் என்றும் திடமாக நம்புகிறேன்.

சட்டசபைக்கு நானும் புதியவன்; எங்கள் கட்சியும் புதியது. எண்ணிக்கையில் சிறுத்திருந்தாலும், தமிழ்நாட்டில் 28 இலட்சம் வாக்காளர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் இடத்தில் நான் உள்ளேன். எண்ணிக்கையை மட்டும் பாராமல், எங்களைப் போன்ற எதிர்க்கட்சிகளின் பின்னாலுள்ள மக்களையும் கணக்கில்கொண்டு தாராளமாக வாய்ப்புக்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனை பேர் என்பது மட்டுமல்ல, எத்தகையோர் என்பதும் முக்கியம்.



சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள ஏழையெளிய மக்கள், உழைக்கும் மக்கள், எதிர்காலத்தை உருவாக்கும் இளைஞர்கள் போன்றோரைக் கொண்டது தேசிய முற்போக்கு திராவிட கழகம். அக்கழகத்தைச் சார்ந்தவன் என்னும் பெருமிதத்தோடு தங்கள் பணி சிறக்க என்னுடைய முழு ஒத்துழைப்பும் உண்டு என உறுதி அளிக்கிறேன்.

தங்களைப் போன்று ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களையும் மனதாரப் பாராட்டி, அவருக்கும் பூரண ஒத்துழைப்பு தரத் தயாராக உள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. ராமச்சந்திரன்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களின் சார்பாகவும், தளி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், என் சார்பாகவும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9–45*

வரலாற்றுச் சிறப்புமிக்க பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய வாழ்த்துக்களையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டசபையை, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய கருத்துக்களை ஏற்று, நடுநிலைமையோடு செயல்படுத்துவீர்கள் என்று நம்புகிறேன். அதேபோல, தமிழகத்தில் உழைப்பாளி மக்களின் ஒப்பற்ற தலைவராக இருக்கின்ற கலைஞர் அவர்கள், நல்ல முறையிலே இந்த ஆட்சியை நடத்துவார் என்ற நம்பிக்கையோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வாழ்த்தி என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்தில் நல்ல தீர்ப்புத் தர வேண்டும் என்பதற்காக வாதாடிய வழக்கறிஞர்கள் இரண்டு பேர், இப்போது நல்ல தீர்ப்பு வழங்க வேண்டிய ஓரிடத்திற்கு வந்திருக்கின்றார்கள்; அவ்வாறு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதிலே ஒருவர் தாங்கள். மற்றொருவர், மாண்புமிகு துரைசாமி அவர்கள். இருவருமே திறமையான வழக்கறிஞர்கள். அதிலும் தாங்கள் மூத்த வழக்கறிஞர். மூத்த வழக்கறிஞர் மாத்திரம் அல்ல; அனுபவம் வாய்ந்த, ஆற்றல் மிக்க, நெல்லை சீமையிலே பெரும்புகழ் பெற்ற செல்லபாண்டியன் அவர்களுடைய மாணவராக இருந்து பயிற்சி பெற்றவர்கள். செல்லபாண்டியன் அவர்கள், இந்த அவையை நடத்திய அந்தக் காலக்கட்டத்திலும், நான் இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்திருக்கின்றேன். கண்டிப்பு, கனிவு இரண்டும் மாறி மாறி அவருடைய நிர்வாகத்தில் அவை நடத்தும் பான்மையில் அன்று காணப்பட்டது. அதற்குப் பிறகு, பல அவைத் தலைவர்கள், இந்த அவையை அலங்கரித்திருந்தாலும்கூட, இப்போது அமைச்சராக இருக்கின்ற திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள், அந்தப் பெருமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பழைய வரலாறுகளையெல்லாம் தாங்களும், துணைத் தலைவர் அவர்களும் மனதிலே பதிய வைத்துக்கொண்டு, இந்த அவைக்குப் பெரும் சிறப்பை வழங்குவீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

எதிர்க்கட்சிகளைப் பற்றி, எப்படி ஆளுங்கட்சியினர் நடந்துகொள்ள வேண்டும் என்பதை நம்முடைய கண்ணப்பன் அவர்கள் சுட்டிக்காட்டினார், அறிஞர் அண்ணா அவர்களுடைய ஒரு கூற்றிலேயிருந்து. கிருஷ்ணா ராவ் அவர்கள் இந்த அவையின் தலைவராக வீற்றிருந்து, காங்கிரஸ் கட்சி கோலோச்சிய அந்தக் காலக்கட்டத்தில், அண்ணா அவர்களுடைய தலைமையிலே நாங்கள் எல்லாம், 1957 ஆம் ஆண்டு எதிர் வரிசையிலே அமர்ந்திருந்தோம். எதிர்க் கட்சி வரிசை அல்ல; எதிர்க் கட்சிக் குழு என்ற நிலையிலே நாங்கள் 15 பேர் அமர்ந்திருந்தோம். நம்முடைய பேராசிரியர் உள்ளிட்ட 15 பேர் அமர்ந்திருந்தோம். அப்போது அண்ணா அவர்கள் சொன்னார்கள்; பேரவைத் தலைவர் தேர்தலிலே சொன்னார்கள்:

"கேரளத்திலே ஒரு திருவிழாவில் ஒரு யானையைக் கோயில் பிரகாரத்திலே அழைத்து வரும்போது, அந்த யானைக்கு இடப்பட்டிருந்த பணி, ஒரு கொடிக் கம்பத்தைத் தூக்கி நிறுத்த வேண்டும் என்பதாகும். ஆனால், அந்த யானை, கொடிக் கம்பத்திற்கு அருகிலே வந்ததும், அந்தக்



கம்பத்தைத் தூக்கி நிறுத்த மறுத்துவிட்டது. பிடிவாதம் செய்து பார்த்தார்கள். அது இணங்கவில்லை. கடைசியாக என்னதான் காரணம், அந்த யானை அந்தக் கொடிக் கம்பத்தைத் தூக்கி நிறுத்த மறுப்பதற்கு, என்னதான் காரணம் என்று ஆராய்ந்தபோது, எந்தக் கொடிக் கம்பத்தை எந்தக் குழியிலே நாட்ட வேண்டுமோ, அந்தக் குழிக்குள்ளே ஒரு சிறிய பூனைக் குட்டி இருந்தது. அந்தக் கம்பத்தை நாட்டினால் அந்தப் பூனையின் உடல் நசுங்கிவிடுமே என்பதற்காக யானை, பூனைக்காகப் பரிந்து, அந்தக் கம்பத்தை நாட்டவில்லை" என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்களின் இந்த உதாரணத்தைச் சொல்லுவதால், இங்குள்ள எதிர்க் கட்சியைப் பூனை என்று சொல்லவில்லை. பெரிய யானை, சின்ன யானை என்ற அளவிலே நான் அதனை எடுத்துக்கூறி — அந்த அளவில் எதிர்க் கட்சிகளை நடத்த வேண்டும் என்றும் அந்த யானைக்கு உள்ள பரிவு ஆளுங்கட்சிக்கு இருக்கவேண்டும் என்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் குறிப்பிட்டார்கள். எனவே, ஆளுங் கட்சிக் கூட்டணி 167 இடத்திற்கு மேலே இருந்துவிட்டோம் என்பதாலோ, எதிர்க் கட்சி 70 இடத்தைத் தாண்டவில்லை என்ற காரணத்தாலோ கருத்துக்களுக்கு மதிப்பு அளிப்பதில் எள்ளளவும் நாங்கள் பின்வாங்கமாட்டோம் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–50

இந்த அவைக்கு ஒரு வரலாறு உண்டு. 85 ஆண்டுகளுக்கு முன்பு 1921 ஆம் ஆண்டு அப்பொழுது வெள்ளையருடைய ஆட்சியில், அரசியல் சட்டம் வகுக்கப்பட்டது. இந்தியாவிற்காக வகுக்கப்பட்ட அந்த அரசியல் சட்டத்தில், இரண்டே மாநிலங்களுக்கு இரட்டை ஆட்சி முறை கொண்டு வரப்பட்டது. அதை அறிவித்தவர் அந்தக் காலத்திலே Duke of Connaught என்பவர் ஆவார். அந்த இரட்டை ஆட்சி, இந்தியாவிலே பஞ்சாப் மாநிலத்திலும், அடுத்தபடியாக சென்னை மாகாணத்திலும்தான் – அப்பொழுது தமிழ்நாடு என்று பெயர் இல்லை, சென்னை மாகாணம், பரந்த சென்னை மாகாணம்; ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட சென்னை மாகாணம் – அந்த மாகாணத்திலேதான், இரண்டு மாகாணத்திலேதான் அன்றையதினம் அந்த அரசியல் சட்டம் கொண்டுவரப்பட்டது, இரட்டை ஆட்சி முறை வந்தது. அப்படி இரட்டை ஆட்சி இங்கே நடந்தபொழுதுதான், நீதிக் கட்சியினுடைய ஆட்சியும் இந்த மாகாணத்திலே அன்றைக்கு வந்தது. அந்த ஆட்சியிலே ஒரு அமைச்சராக இருந்தவர்தான் பி.டி. ராஜன் அவர்கள் என்பதையும் சரித்திரம்

சொல்லிக்கொண்டிருக்கின்றது. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரையில், நீதிக் கட்சியினுடைய பாரம்பரியம், தமிழ்நாட்டில் ஆட்சி செலுத்துகின்ற ஒரு வல்லமையைப் பெற்றதற்குக் காரணம், நம்முடைய முழு முதல் கொள்கையாக இருக்கின்ற இட ஒதுக்கீட்டு முறைதான்; வகுப்புவாரி பிரதிநிதித்துவம்தான். அது இன்றளவும் இந்திய அளவிலே போராட்டமாக வெடித்துக் கொண்டிருப்பதை நாம் காணுகின்றோம். அந்தப் போராட்டத்திற்கு பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் திராவிட தலைவர்கள் எந்த அளவிற்குக் கை கொடுத்தார்கள், வலிமை சேர்த்தார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டிய காலகட்டத்தில் இன்றைக்கு நாம் இங்கே கூடியிருக்கின்றோம்.

இந்த அவையில் இன்றைக்கு நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த அழகான ஆசனம் இருக்கின்றதே, இது 1922 ஆம் ஆண்டு வெலிங்டன் பிரபுவும், அவருடைய துணைவியாரும் இந்த அவைக்கு, தங்களுடைய இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்து, பரிசாக அளித்த சிம்மாசனம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளையர் என்னதான் தீயவர்களாக இருந்தாலும்கூட, நியாயம், நீதி இவற்றை 95 சதவீதமாவது கடைபிடித்தார்கள். நாம் முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும் என்பதை இந்த சிம்மாசனத்திலே அமர்ந்திருக்கிறபோது, நீங்களும், அதற்கு அடங்கி நடக்க உறுதி எடுத்துக் கொண்டிருக்கின்ற நாங்களும் நிறைவேற்ற வேண்டும், நிறைவேற்றுவோம் என்ற உறுதியை இங்கே நான் தெரிவித்து, மிகத் திறமை வாய்ந்த ஒருவரிடத்திலே பயிற்சி பெற்ற தாங்கள், அந்தத் திறமையை இந்த அவைக்குத் தரவேண்டும் என்று கேட்டு, அவையிலே சிறு சிறு மாச்சரியங்கள், சிறு சிறு தவறான கருத்துக்கள், புரிந்துகொள்ளாத தன்மைகள், புதியவர்களாக வந்திருக்கின்றவர்களுக்கு ஆளுங்கட்சி உட்பட, எதிர்க் கட்சி உட்பட, எல்லோருக்கும் ஏற்படக்கூடும். உதாரணமாக, 'பொய்' என்ற வார்த்தையை அவையிலே சொன்னால், அது அவைக் குறிப்பிலே இடம்பெறக் கூடாது; சொன்னவர் வாபஸ் வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்காக 'பொய்' என்ற வார்த்தையையே நாம் உச்சரிக்காமல் இருக்க முடியாது. அப்படியிருந்தால், திருக்குறளையே சொல்ல முடியாது.

முற்பகல் 9–55

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"

என்பதிலே 'பொய்' என்ற சொல் இருக்கிறது. ஆகவே 'பொய்' என்பதையே சொல்ல முடியாமல் போய்விடும். ஒருவர் 'பொய்' சொல்கிறார் என்று



சொன்னால்தான், அது Parliament–இல் இடம்பெறக் கூடாத, அவைக் குறிப்பில் இடம்பெறக் கூடாத ஒரு வார்த்தையாகும்.

இன்னொன்று. நான் திடீரென்று அவையைவிட்டு வெளியே செல்வதாக வைத்துக்கொள்ளுங்கள், இயற்கை உபாதையின் காரணமாகவோ, வேறு வேலையாகவோ. அப்போது என்னைப்பற்றி யாராவது பேசினால், திடீரென்று ஓர் உறுப்பினர் எழுந்து, அவையில் இல்லாதவர்களைப்பற்றிப் பேசலாமா என்று கேட்பது ஒரு முறையாக இருக்கிறது. அதுவும் தவறு. அவையில் இல்லாதவர்கள் என்றால், அவைக்கே தேர்ந்தெடுக்கப்படாதவர்களாக இருந்தால்தான், அவையில் இல்லாதவர்கள் என்று பொருள்படும். அந்த நேரத்திற்கு வெளியிலே சென்றிருந்தால், அவர்கள் அவையில் இல்லாதவர்கள் என்கின்ற அளவிற்குக்கூட, சில நேரங்களில் — இன்றல்ல, பல காலமாக — இங்கே தர்க்கங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்தச் சின்ன சின்ன விஷயங்களையெல்லாம்கூட நாம் கற்றுக்கொள்ள வேண்டும். சட்டசபைக்கென்று விதிமுறைப் புத்தகங்கள் இருக்கின்றன. நீதிகள், நெறிமுறைகள், சட்டங்கள், விதிகள், மரபுகள் இவையெல்லாம் அச்சடிக்கப்பட்ட புத்தகம் இருக்கிறது. அதை ஒவ்வொரு உறுப்பினரும் படித்துப் பார்த்து, அதன்படி நடப்பதற்கு ஆளுங்கட்சி, எதிர்க் கட்சியில் உள்ள அத்தனை பேரும் பயிற்சி பெற வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே ஒரு வேண்டுகோளாக வைத்து, அந்தப் பயிற்சியை அவர்கள் ஒருவேளை பெறாவிட்டாலும், தலைவர் அவர்களே, தாங்களும், துணைத் தலைவர் அவர்களே, தாங்களும் அவர்களுக்கு எடுத்துக்கூறி, அவையை நல்ல முறையிலே அமைதியாக நடத்தி, தமிழ்நாடு ஒரு ஜனநாயகத் தோட்டம் என்பதை நாட்டுக்கு, உலகத்திற்கு அறிவிக்க அனைவரும் உதவிடுவோம் என்று கூறி, தங்களையும், துணைத் தலைவர் அவர்களையும் வாழ்த்தி, வரவேற்று அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நன்றியுரையாற்றுவார்கள்.

***மாண்புமிகு திரு. வி.பி. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அனைவரது ஆதரவு பெற்று, ஒருமனதாகப் பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப் பெற்றிருக்கிறீர்கள். தங்களை முழுமனதோடு வாழ்த்துகிறேன். ஜனநாயகத்தின் இதயமான சட்டப் பேரவையின் துணைத் தலைவர்

பொறுப்பிற்கு முன்மொழிந்த ஜனநாயகக் காவலர், சமூகநீதிக் காவலர், தமிழ்ச் சமுதாயத்தின் ஒரே தலைவர், இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு மேல்ான இந்தியச் சமுதாய வரலாற்றில், மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தும் வகையில், அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற புரட்சி உத்தரவைப் பிறப்பித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அறிவு, ஆற்றல், ஒழுக்கம், இவையனைத்தும் அனைவருக்கும் பொதுவானது என்று சுட்டிக்காட்டியதோடு, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவனின் சொல்லிற்குச் செயல்வடிவம் தந்த மனித குலத்தின் மகத்தான தலைவர்களில் ஒருவரான எங்கள் தலைவர், முதல்வர் கலைஞர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை முன்னவர் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும், மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாமன்ற உறுப்பினராக என்னைத் தேர்வு செய்த, சங்ககிரி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர் என்ற பெருமை முதலமைச்சராகிய உங்களுக்கே உரியது. அதனை நிரூபிக்கும் வண்ணமாகத்தான், கடந்த ஆறு நாட்களாக நடைபெறுகின்ற நிகழ்வுகள் அமைந்துள்ளன. அத்தகையத் தலைவரின் தொண்டனாகப் பணியாற்றுவது எனக்குக் கிடைத்த பேறாகும். ஏற்கெனவே இரண்டு ஆண்டு காலம் இப்பொறுப்பில் பணியாற்றியிருக்கிறேன். தற்போது வயதும், அனுபவமும் கூடியிருக்கிறது. இவை இரண்டும் என்னை மேலும் சிறப்பாக, விருப்பு, வெறுப்பின்றி பணியாற்றச் செய்யும் என்ற உறுதியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் தாரக மந்திரமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் காப்பாற்றிட முழுமூச்சுடன் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

என்னுடைய இந்தப் பணியில் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென, என்னை இந்தப் பொறுப்பிற்கு தேர்ந்தெடுத்த இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களை வேண்டிக்கொண்டு, மனமார்ந்த



நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வாழ்த்தி, இங்கு உரையாற்றிய தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் உரித்தாக்கி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தமிழக முதல்வரும், தமிழினத் தலைவரும், ஐந்தாம் முறையாக அகிலம் போற்றும்வகையில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள எங்களுடைய குடும்பத் தலைவர் கலைஞர் அவர்களே, எங்களுக்கு இன்மானத்தை இதயத்தில் பதிக்க வைத்த இந்த அவையின் முன்னவர் மாண்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, இந்த அவையில் வீற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, பல்வேறு அரசியல் கட்சிகளின் மாண்புமிகு உறுப்பினர்களே, "உருள் பெருந்தேர்க்கு அச்சாணிபோல்" அரசு நிர்வாகத்தின் அச்சாணியாக விளங்குகின்ற அரசு அலுவலர்களே, ஜனநாயக அமைப்பின் நான்காவது தூணாக விளங்கும் செய்தியாளர்களே, வணக்கம்.

தமிழ் மணக்கும் பொதிகைத் தென்றல் வீசும் நெல்லை மண்ணில், சாமானியனாகப் பிறந்த என்னை, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் பிறந்த என்னை, சரித்திரப் புகழ்வாய்ந்த இந்தச் சட்டமன்றத்தின் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து மகிழ்ந்து கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் எனக்குத் தாய், தந்தையாக விளங்கி இம்மாபெரும் சிறப்பை அளித்துள்ளார்கள். எத்தனையோ பேர் என்னைவிட தகுதியிலும், திறமையிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கக்கூடியவர்கள் இந்த அவையிலே இருக்கிறார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்த பலரில் என்னைத் தேர்ந்தெடுத்ததின்மூலம் என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள், இந்தத் தம்பியின்மேல் வைத்துள்ள பாசத்தையும், நேசத்தையும் எண்ணுகிறபோது, நான் இந்தப் பாசத்திற்கும் நம்பிக்கைக்கும் உரியவனாக என்னைத் தகுதியுள்ளவனாக ஆக்கிக்கொள்ள வேண்டுமே என்கின்ற பொறுப்புணர்ச்சி என்னிடத்திலே உருவாகியுள்ளது என்பதை முதலில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அவரது தம்பிகளுக்கு எதிர் நீச்சல் பயிற்சி மட்டுமல்ல, நெருப்பாற்றில்கூட நீந்தக் கற்றுக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டும்

என்கின்ற தலைவர் கலைஞர் அவர்களின் தணியாத தாகம்தான், அவருடைய உயிர் மூச்சாக விளங்கும் இலட்சியம் என்பதை நாமெல்லாம் நன்கு அறிவோம். வீழ்ச்சியுற்று தவிக்கும் அத்தகைய தமிழகத்தை, எழுச்சியுற்ற தமிழகமாக உருவாக்கும் பொறுப்பு, நம் அனைவருக்கும் உண்டு என்பதில் நாம் ஒன்றுபட்ட உணர்வையே கொண்டிருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. என்னைப் பேரவைத் தலைவராக அறிவித்தது, என் வாழ்நாளில் மறக்க முடியாத நாள் மட்டுமல்ல; நான் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட துணைபுரிந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், என்னை மிகுந்த நம்பிக்கையுடன் தேர்ந்தெடுத்த அம்பாசமுத்திரம் தொகுதி மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான், பேருக்குத் தலைவராக இருந்து பயனில்லை; உங்களிடம் "நல்ல பெயர் பெற்ற" தலைவராகச் செயல்படுவதுதான் எனக்குப் பெருமை; என்னை உருவாக்கிய குடும்பத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் பெருமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பேரவையின் தலைவராக மிகச் சிறந்த சான்றோர்கள் பணியாற்றியிருக்கிறார்கள். அவர்களை நினைவிற்கொண்டு வணங்கி, மனதில் கொண்டு, போற்றக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, எங்கள் நெல்லை மாவட்டத்தின் மைந்தர்களாக என்னுடைய மூத்த வழக்கறிஞர் அமரர் செல்லபாண்டியன் அவர்கள், அமரர் சி.பா. ஆதித்தனார் அவர்கள் ஆகியோர் இப்பேரவையின் தலைவர்களாகப் பணிபுரிந்திருக்கிறார்கள். எனது மூத்த வழக்கறிஞர் திரு. செல்லபாண்டியன் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பேரன்பைப் பெற்று, இப்பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்று சிறப்பாகச் செயல்பட்டார்கள். அவரது இளம் வழக்கறிஞராக அவரிடம் பயிற்சி பெற்று இன்று தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப்பெற்ற தம்பிகளில் ஒருவனாகிய எனக்கு, பெறுவதற்கு அரிய இந்தப் பெருமை அளிக்கப்பப்பட்டுள்ளது. இந்தப் பொறுப்பை நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும், இன்னும் சொல்லப்போனால் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடனும் ஏற்றிருக்கிறேன்.

இந்த நேரத்தில் பிரிட்டிஷ் மக்களவையில் (House of Commons) பேரவைத் தலைவராக விளங்கிய கிளிப்டன் பிரௌன் கூறியதை நினைவு கூர்கிறேன்:

"I am not the Government Man, nor the opposition Man and I am the House of Commons' Man. — நான் அரசினைச் சார்ந்தவனாக இங்கு வீற்றிருக்கவில்லை. அதைப் போன்றே எதிர்க்கட்சியைச் சார்ந்தவனாக, நான் இங்கே அமரவில்லை, நான் இந்தப் பெருமைமிக்க அவையைச் சார்ந்தவனாக இந்த அவையில் பணியாற்ற அமர்ந்திருக்கிறேன்."



எனவே, இந்த அவையின் மைந்தனாக, நடுநிலை தவறாமல் செயல்பட வேண்டிய பொறுப்பில் இருக்கிறேன் என்பதை நான் உளமார உணர்ந்திருக்கிறேன். ஒரு பேரவைத் தலைவருக்கு உரிய மன உறுதி, பொறுமை, மரியாதை, அமைதி, நகைச்சுவை உணர்வு, சட்டமன்ற நடைமுறைகளில் தெளிந்த அறிவு போன்ற அத்தனை குண நலன்களும், உங்கள் அன்பினால் ஒத்துழைப்பால் என்னிடம் நிறைந்திருக்குமென நம்புகிறேன். எனவே, ஆளுங் கட்சி ஒரு கண் என்றால், எதிர்க் கட்சியும் மற்றொரு கண் என்று கருதுகின்ற மனப்பான்மையை என் குடும்பத் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களிடம் வளர்த்திருக்கிறார் என்பதால், என் நடுநிலைமைத் தன்மை, எள் முனையளவும் குறையாது என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

தமிழ்நாடு என்றைக்கும் அமைதிக்கும், சிறந்த பண்பாட்டிற்கும், இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டின் பெருமையைக் காப்பாற்றுவதில் மட்டுமல்ல; நம்மை நம்பியிருக்கிற மக்களின் நம்பிக்கை வீணாகாமல், தமிழக மக்களின் வளர்ச்சிக்கு நாம் அரும்பாடுபட வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. ஏனென்றால், நம்மைத் தேர்ந்தெடுத்த மக்களின் பார்வை, எப்போதும் நம் மீதுதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழ்நாடு, எத்தனையோ நற்பயன்களை இடையில் இழந்திருக்கிறது. எத்தனையோ சரிவுகளைச் சந்தித்திருக்கிறது. தமிழ்நாடு இழந்த பயன்களை மீண்டும் பெற, சரிந்த பெருமைகளை மீண்டும் நிலைநாட்ட, இந்தப் பேரவை உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும். இம்மாமன்றம் இயற்றும் சட்டங்கள், கடைகோடி உழைக்கும் மக்களுக்கும் வாழ்வளிக்கும் சட்டங்களாக அமையவேண்டும் என விரும்புகின்றேன். பொற்காலத் தமிழகத்தை உருவாக்க, விஞ்ஞான காலத்திற்கேற்ப அச்சட்டங்கள் அமைய வேண்டும் என்று விரும்புகின்றேன்.

நான் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டவன் என்ற முறையில், நீதித் துறைக்கும், சட்டமன்றத்திற்கும் இணக்கமான நிலைமை நீடித்தால்தான், நாம் ஜனநாயக நெறியில் உணர்வுபூர்வமாக ஈடுபாடு உடையவர்கள் என நாடு நம்மைப் போற்றும் எனக் கருதுகிறேன். அந்த இணக்கமான

சூழ்நிலைக்கு இம்மியளவும் விரிசல் ஏற்படாமல் காத்துவரும் பொறுப்பு எனக்கு உண்டு, அதைப்போன்று என்னை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்த இந்த அவைக்கும் உண்டு என்று நம்புகிறேன். ஏனெனில், இக்கருத்தை நன்கு உணர்ந்தவர்களே, இந்தச் சட்டப் பேரவையில் அமர்ந்திருக்கிறோம் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு உண்டு.

நிறைவாக, என்னைப் பெற்ற தாய்க்கும் மேலாக என்னை இந்த உயர்ந்த நிலையில் வைத்துப் பெருமை கொள்ளும் என் குடும்பத் தலைவர் கலைஞர் அவர்களின் பெருமையை நான் என்றும் நன்றியுடன் போற்ற கடமைப்பட்டவன். அவையின் மரபுப்படி, என்னை உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் என்ற நிரந்தரப் பெருமையைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்திருக்கலாம். ஆனால், நான் அந்தக் கழகக் குடும்பத்தில் அங்கம் என்பதை நான் என்றும் மறக்கமாட்டேன்.

"அரிசி கொதிக்கும் பானை ஆளுங்கட்சி என்றால், அகப்பையாக விளங்குவது எதிர்க்கட்சி" என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். என்னைப் பொறுத்தவரையில், பானையில் அரிசியும் அளவுக்கு மீறி கொதிக்கக்கூடாது; அகப்பையும் அடிக்கடி கொதிக்கும் பானையைக் கிளறக்கூடாது. ஒரு வீட்டிற்குத் தேவையான அரிசி பானையும், அகப்பையும்போல, நாட்டிற்குத் தேவையான நல்ல ஆளுங்கட்சியாகவும், திறமையாக வாதிடும் எதிர்க்கட்சியாகவும் இந்தப் பேரவையில் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அந்தவகையில்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

எனும் குறளுக்கு எடுத்துக்காட்டாக, இந்தப் பேரவையில் நான் நடுநிலையோடு செயல்பட உங்கள் அன்பினையும், நல்ல ஒத்துழைப்பையும் எனக்கு நல்கி, நம்மைத் தேர்ந்தெடுத்த தமிழக மக்களுக்குப் பணியாற்ற, இப்பேரவையில், அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று உங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறேன். இங்கே பேரவைத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. வி.பி. துரைசாமி அவர்களையும் பாராட்டி, பேரவைத் தலைவருக்கு இனி அதிகம் பேச வாய்ப்பில்லை. இனி எல்லா வாய்ப்புகளும் உங்களுக்கே என்று கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் *24–5–2006* ஆம் நாள் புதன்கிழமை காலை *9–30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227069

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.